# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 25வது கூட்டம் 20-02-2011 அன்று அலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு பங்குத் தந்தையின் ஆரம்ப செபத்துடன் கூட்டம் ஆரம்பமானது அன்றைய தினம் திரு.விஜி அவர்களும் திரு. ஜீவன் அவர்களும் சமூகம் தரவில்லை. கடந்த மாத கூட்ட அறிக்கை செயலாளர் அவர்களால் வாசிக்கப்பட்டது. கூட்ட அறிக்கையினை செல்வன் சாள்ஸ் அவர்கள் முன் மொழிந்தார் திரு. தேவா அவர்கள் வழிமொழிந்தார்.

மேலும் தவக்கால உண்டியல் சேகரிப்பு நிதி இந்த முறை உதவுங்கரங்களை முன்னோக்கியதாக அமையும் எனவும் அதை வழமை போல் சிறுவர்களே சேகரித்து காணிக்கையாக வழங்குவார்கள் என்றும் இந்த தவக்கால உண்டியல் சிறுவர்களிடம் வழங்க காரணம் அவர்களின் உள்ளத்தில் உதவி செய்யும் மனப்பக்குவம் அவர்களிடையே வளரவேண்டும் என்பதே உள்நோக்கம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டன. தவக்கால வழிபாடுகள் வழிபாட்டுக் குழு ஒழுங்கு செய்யும் எனவும், அத்தோடு சித்திரை மாதம் 15ம் திகதி மாலை 7.30 மணிக்கு ஞானஒடுக்கம் ஒன்றினை மேற்கொள்ளலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது. மறையாசிரியர்கள் பயிற்சி நெறிக்கு இன்னும் சிலர் தேவை என்றும் தற்பொழுது 15 ஆசிரியர்கள் உள்ளார்கள் எனவும் இன்னும் சிலர் எங்கள் பங்குக்கு தேவை எனவும் தந்தை கூறினார்.

அடுத்து முக்கியமான விடயம் அன்பியங்கள் பங்குதந்தை கூடியவரை வரை பட விரிவாக்கம் செய்துள்ளார். தொடர்ந்து உரிய விலாசத்தில் உள்ளவர்களை ஒன்றிணைக்கவும் உதவி செய்யும்படி அனைவரையும் கேட்டுக் கொண்டார். அடுத்த கூட்டத்திற்கு முன்பு இதனை செய்தால் புதியவர்களை பங்குசபைக்கு கொண்டு வரலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது. இறுதியாக திரு.அம்புறோஸ் அவர்களின் இறுதி செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

அருட்.தந்தை அன்றூா தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்

## ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 20-02-2011